# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8030878

1. District மாவட்டம் : Chennai PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 1/AC/2020/CC-IV Date: நாள் 07.11.2020

2. (i) Act சட்டம்: Prevention of Corruption [Amendment] Act 2018 Sections பிரிவுகள்: 7, 7(A)
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல் 06.11.2020 Date to : நாள் வரை 06.11.2020
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல் 15.00 hrs Time to : நேரம் வரை 22.30 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07.11.2020 Time நேரம் : 06.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 07.11.2020 Time நேரம் : 06.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 2 km North West
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி Office of the Taluk Office, Contonment House Road, Diary form Road, Alandur, Chennai-16.
   (c) Incase outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. Antony,
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
   (d) Nationality : நாட்டினம் Indian
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Deputy Inspection Cell Officer, Taluk Excise Officer,
   (g) Address : முகவரி Mambalam Taluk, Chennai

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) லலிதா, வட்டாட்சியர், ஆலந்தூர், சென்னை. 2) முத்துராஜன், VAO, நந்தம்பாக்கம், 3) குமரேசன், DEO, e-sevai centre Alandur, 4) சிவக்குமார், S/o. சீனிவாசன், 5) ரஜினிகுமார், சிறப்பு துணை வட்டாட்சியர், நகர நிலவரி திட்டம், ஆலந்தூர், 6) மனோகரன் ஆய்வாளர், -do-, 7) முருகேசு சங்கர், குறுவட்ட அளவர், வட்டாட்சியர் அலுவலகம், ஆலந்தூர், 8) நடராஜன், EPIC operator, Election cell, வட்டாட்சியர் அலுவலகம், ஆலந்தூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Unaccounted Money Rs. 51,400/-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

07/11/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
07.11.2020 at 14.00 hrs

Name: பெயர் C. Jansi Rani
Rank: நிலை Inspector of Police No. எண் ......
CC-IV, VGAC, Alandur, Chennai-16



Scanned with CamScanner

## FIR Continuation (Column – 12)

இன்று 07.11.2020 ஆம் தேதி காலை 06.00 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புதுறை, சென்னை நகரபிரிவு -4 காவல் ஆய்வாரள் ஆகிய நான் நிலையத்தில் இருந்தபோது 06.11.2020 ஆம் தேதி இன்று சென்னை மாவட்ட துணை ஆய்வுகுழும அலுவலாக பணியாற்றி திரு. A.அந்தோணி என்பவர் கொடுத்த கணினியில் தட்டச்சு செய்து புகாரை சென்னை நகரபிரிவு-4 துணை கண்காணிப்பாளர் திரு. ம.வெற்றிசெழியன் அவர்கள் பெற்று புகாரின் தன்மைபடி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவிட்டதன் பேரில் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விவரம் பின்வருமாறு. From A.Antony,Deputy Inspection Cell Officer, Taluk Excise Officer, Mambalm Taluk,Chennai. To The Deputy Superintendent of Police, Vigilance & Anti-Corruption,Chennai City – IV Dett.,Chennai – 16.Lr.No.E/05/2020, dated 06.11.2020_Sir, Sub:-Joint Surprise Check conducted on 06.11.2020 at Taluk Office, Alandur, Chennai District – Report - forwarded – reg. I state that on 06.11.2020 a joint surprise check was conducted at the O/o. the Taluk Office, Alandur, Chennai along with the Deputy Superintendent of Police, V & AC, CC – IV Detachment, Chennai -16 and his team between 15.00 hrs and 22.30 hrs. During the joint surprise inspection an amount of Rs.51,400/- was seized and the incriminating documents were seized. I herewith sent the proceeding drawn during the time of Joint Surprise Inspection conducted on 06.11.2020 and the properties namely Rs.51,400/- (Rupees One Fifty one thousand and Four hundred Only) with incriminating documents for further course of action. Enclosure:1)Original Proceeding, dt.06.11.2020 2)Cash Rs.51,400/-3)Documents seized during the joint surprise check.4) Statement of Witnesses.Kindly acknowledge receipts of the same. Deputy Inspection Cell Officer,Taluk Excise Officer,Mambalm Taluk,Chennai. To, The Director, Vigilance and Anti-Corruption, Chennai –16 Ins Tmt.Jansi Rani, CC-IV,V&AC, register a case and invetigate. (sd/-xxx) M. VetryChezhiyan, DSP,CC-IV, V&AC 06/11/2020 Sir, Recived the complaint and registered a case in Cr.No. 1/AC/2020/CC-IV U/s. 7,7A of PC Act as amended in 2018 on 07.11.2020 at 06.00 hrs (sd/xxx) C.Jansi Rani, CC-IV,07.11.2020 மாவட்ட ஆய்வுக்குழும அலுவலர், சென்னை மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப் பிரிவு-IV, காவல் துணைக் கண்காணிப்பாளர் இணைந்து இன்று 06.11.2020 சென்னை-16,

ஆலந்தூர் தாலுக்கா அலுவலகம், டெய்ரி பார்ம் ரோடு, அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டுத்தணிக்கை. இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள்: 1)திரு.A.அந்தோணி, வட்ட கலால் அலுவலர்,வட்டாட்சியர் அலுவலகம்,மாம்பலம் வட்டம், சென்னை-78. திரு.ம.வெற்றி செழியன், காவல் துணைக் கண்காணிப்பாளர், சென்னை நகரப் பிரிவு-IV, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. திருமதி.T. ஜான்சிராணி,காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-IV, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. சென்னை-16, ஆலந்தூர் தாலுக்கா அலுவலகம், டெய்ரி பார்ம் ரோடு, அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டுத்தணிக்கையில் சென்னை மாவட்ட ஆய்வுக்குழும அலுவலர் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப் பிரிவு-IV, காவல் துணைக் கண்காணிப்பாளர் இணைந்து இன்று (06.11.2020) மதியம் சுமார் 15.00 மணியளவில் இருதுறை திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி வட்டாட்சியர் அலுவலகம் ஆலந்தூரில் GST NH ரோட்டிலுள்ள கண்டோன்மெண்ட் ஹவுஸ் ரோட்டில் டெய்ரி பார்ம் ரோட்டில் அமைந்துள்ளது. இந்த டெய்ரி பார்ம் ரோடானது கிழக்கு மேற்காக செல்கிறது. இந்த ரோட்டில் வட்டாட்சியர் அலுவலகத்தின் மெயின் கேட் வடக்கு பக்கம் பார்த்தார் போலவும், இவ் அலுவகத்தின் பிரதான நுழைவாயில் வடக்கு பக்கம் பார்த்தார் போல் உள்ளது. இவ்வலுவலகம் தரை தளம் + முதல் தளம் கொண்டுள்ளது. இந்த பிரதான நுழைவாயிலில் நுழைந்தவுடன் வலது பக்கம் இ-சேவை மையம் கிழக்கு பக்கம் பார்த்தால் போல் வாசல் உள்ளது. இந்த பிரதான நுழைவாயில் நுழைந்தவுடன் இடது பக்கம் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் தெற்கு பக்கம் பார்த்தால் போல் வாசலுடனும் அந்த அறைக்கு பக்கத்தில் உள்ள நுழைவாயில் உள்ளே ஒரு பெரிய ஹாலும் அந்த ஹாலின் இடது பக்கம் தனி வட்டாட்சியர் சமூக பாதுகாப்பு அலுவலரின் அறையின் வாசல் தெற்கு பக்கம் பார்த்தார் போல் உள்ளது. அதற்கடுத்து வட்டாசியர் மற்றும் வட்ட நிர்வாக நீதிபதி ஆலந்தூர் அவர்களின் அறை தெற்கு பக்கம் பார்த்தார் போல் உள்ளது. இந்த வட்டாட்சியர் அலுவலகத்தின் பிரதான நுழைவாயிலுக்கு நேர் எதிரே முதல் மாடிக்கு செல்லும் படிக்கட்டுகள் உள்ளது. முதல் மாடி ஏறியவுடன் நேர் எதிரே Special DRO, சென்னை ஏர்போர்ட் எக்ஸ்பென்சன் காஞ்சிபுரம் அவரது அறை தெற்கு பக்கம் பார்த்தார் போல் வாசலுடனும், அதன் பக்கத்தில் நுழைந்தவுடன் பெரிய ஹாலும் அந்த ஹாலின் இடது பக்கம் முதலாவது புழுதிவாக்கம் நகர நில அளவை திட்டம் அலுவலக அறையும், அதற்க்கடுத்தார் போல் நகர நிலவரி திட்டம் ஆலந்தூர் அவரது அறையும் தெற்கு பக்கம் பார்த்தார் போல் வாசலுடன் உள்ளது. இந்த அறைக்கு பக்கத்தில் உள்ள இரண்டு அறைகளும் தெற்கு பக்கம் பார்த்தால் போல் Election குள்ள பொருட்கள் உள்ளது. இந்த

பெரிய ஹாலில் Election சம்மந்தமான கோப்புகள் பார்க்கும் அலுவலர்கள் இருக்கை உள்ளது. முதல் மாடியில் படிக்கட்டு ஏறியவுடன் உள்ள மேற்கு பக்கம் நகர நிலவரி திட்ட அலுவலகத்தின் பதிவறை உள்ளது. அதை ஒட்டினார் போல் வடக்கு பக்கம் பார்த்தால் போல் ஒரு அறை உள்ளது. அந்த அறையின் முதலாவது திரு.மனோகரன் உதவியாளர் நிலை, வருவாய் ஆய்வாளர் இருக்கையும், அதை ஒட்டினார் போல் தெற்கு பக்கம் திருமதி.ஜெயலெட்சுமி, நகர சார் ஆய்வாளர் என்பவரது இருக்கையும், திருமதி.வாசுகி, உதவியாளர் நிலை, வருவாய் ஆய்வாளர் இருக்கையும் முறையே கிழக்கு பக்கம் பார்த்தார் போல் உள்ளது. இந்த அறைக்கு நேர் எதிரே தெற்கு பக்கம் பார்த்தார் போல் வாசலுடன் நில அளவை அலுவலகம் அமைந்துள்ளது. அதில் முதலாவது திருமதி.பிரியதர்ஷினி வரைவாளர் இருக்கையும், இரண்டாவது திரு.முகமதுசுகில் என்பவரது இருக்கையும் மேற்கு பக்கம் பார்த்தால் போல் உள்ளது. இவர்களுக்கு எதிரே உள்ள அறையில் திரு.சரவணன் வட்ட துணை ஆய்வாளர் என்பவரது இருக்கை கிழக்கு பக்கம் பார்த்தால் போல் உள்ளது.இந்த கூட்டு தணிக்கையின் போது வட்டாட்சியர், ஆலந்தூர் திருமதி.B.லலிதா அவர்கள் அரசு வாகனம் Bolero TN 21 G 0559 –வில் தனது அலுவலகத்தை விட்டு வெளியே வந்தவரை நிறுத்தப்பட்டது. அவரிடம் கூட்டுத் தணிக்கை செய்ய வந்திருப்பதாக தகவல் தெரிவித்து அலுவலகத்திற்கு திருப்பி அழைத்து வரப்பட்டது. இந்த வட்டாட்சியர் அலுவலகத்தில் முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்தில் எல்லா அறைகளையும் சோதனை செய்யப்பட்டது. இச்சோதனையில் கீழ்காணும் கணக்கில் வராத லஞ்ச பணமும், மேலும் அங்கு வந்திருந்தவரிடம் இருந்தது.

| வரிசை எண் | யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது | எவ்வளவு கைப்பற்றப்பட்டது | எந்த இடத்திலிருந்து கைப்பற்றப்பட்டது. |
|---|---|---|---|
| 1) | திரு.முத்தரசன் VAO அவர்களால் தூக்கி எரியப்பட்டது | ரூ.5000/- [1 X Rs.2000; 6 X Rs. 500 ] | தரை தளத்திலுள்ள பெரிய ஹாலில் நுழைந்தவுடன் வலது பக்க கடைசியிலுள்ள ரேக்கிலிருந்து |
| 2) | திரு.முத்தரசன் VAO என்பவரிடமிருந்து | ரூ.2,300/- [2 X Rs.500; 1 X Rs. 200; 8X Rs.100; | பர்ஸிலிருந்து |

| | | | |
|---|---|---|---|
| | | 4XRs.50: 10 X Rs.10 ] | |
| 3) | திரு.முத்தரசன் VAO என்பவரிடமிருந்து | ரூ.510/- [1 X Rs.200; 2 X Rs.100; 1 X Rs.50; 1 X Rs.20; 4 X Rs.10;] | மேல் சட்டை பாக்கெட்டிலிருந்து |
| 4) | திரு.S.குரல் அழகன் | ரூ.4,800/- [ 6 X Rs.500: 2 X Rs.200; 12 X Rs.100; 1 X Rs.50; 3 X Rs.20; 9 X Rs.10;] | பர்ஸிலிருந்து |
| 5) | திரு.நடராஜன் | ரூ.1,250/- [2 X Rs.500: 1 X Rs.200; 1 X Rs.50;] | பாக்கெட்டிலிருந்து |
| 6) | திரு.K.வெங்கட்ராமன், | ரூ.36,000/- [ 72 X Rs.500] | இடது பேண்ட் பாக்கெட்டிலிருந்து |
| 7) | திரு.மனோகரன் | ரூ.500/- [ 1 X Rs.500] | பாக்கெட்டிலிருந்து |
| 8) | திரு.முகமதுசுசில் | ரூ.1040/- [1 X Rs.500; 1 X Rs.200: 2 X Rs.100; 1 X Rs.50; 3 X Rs.20; 3 X Rs.10;] | பர்ஸிலிருந்து |

இந்த திடீர் கூட்டு தணிக்கையின்போது திருமதி.B.லலிதா வட்டாட்சியாளர் அவர்களோடு நான்கு சக்கர வாகனத்தில் இருந்த திரு.முத்தரசன் VAO அவர்களும் சோதனை செய்ய வட்டாட்சியர் அலுவலகத்திற்குள் அழைத்துவரப்பட்டார். திரு.முத்தரசன் VAO அவர்கள் கையில் வைத்திருந்த பணத்தை தூக்கி வலது பக்க கடைசியிலுள்ள ரேக்கில் எரிந்து விட்டார். அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க ரூ.5000/- இருந்தது. தொடர்ந்து அவரை சோதனை செய்ய அவருடைய சட்டை மேல் பாக்கெட்டிலிருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க ரூ.510/- இருந்தது. மேலும் அவருடைய பர்ஸிலிருந்த பணத்தை எண்ணிப்பார்க்க ரூ.2,300/- இருந்தது. இதைப்பற்றி கேட்க மருத்துவ செலவுக்காக மற்றும் வீட்டு செலவுக்காக வைத்திருந்தாக கூறினார். இவர் கூறிய காரணம் ஏற்க்கத்தக்தாக இல்லாததால் ரூ.7,810/-த்தை வழக்கின் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இச்சோதனையின்போது இ-சேவை மையத்தில் பணியாற்றிகொண்டிருந்து பணியாளர்களை சோதனை செய்யப்பட்டது. அதில் திரு.S.குரல் அழகன் அவர்களை சோதனை செய்ய பர்ஸிலிருந்து எடுக்கப்பட்ட பணத்தை எண்ணி பார்க்க ரூ.4,800/- இருந்தது. இதை பற்றி விசாரிக்க அவரது சித்தி அவரது அம்மாவிடம் கொடுக்க சொல்லி கொடுத்த தொகை என்று கூறினார். இவர் கூறிய காரணம் ஏற்க்கத்தக்தாக இல்லாததால் ரூ.4,800/-த்தை வழக்கின் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இச்சோதனையின் போது முதலாவது மாடியின் தேர்தல் பிரிவில் பணியாற்றும் திரு.நடராஜன் என்பவரை சோதனை செய்ய அவரது சட்டை

பாக்கெட்டிலிருந்து பணம் எடுக்கப்பட்டது. பிறகு எடுக்கப்பட்ட பணத்தை எண்ணி பார்க்க ரூ.1,250/- இருந்தது. இந்த பணம் பற்றி விசாரிக்க LIC online-ல் கட்ட வைத்திருந்ததாக கூறினார். இவர் கூறிய காரணம் ஏற்கத்தக்கதாக இல்லாததால் ரூ.4,800/-யித்தை வழக்கின் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.இச்சோதனையின் போது முதல் மாடியில் திரு.C.ரஜினிகுமார், Special Thasildhar, Town Settlement என்பவரது அறையில் அமர்ந்து பேசி கொண்டிருந்த ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் பற்றி விசாரிக்கப்பட்டது. இதில் திரு.K.வெங்கட்ராமன் என்பவர் தான் மீனம் என்ற பெயரில் கன்ஸ்ரெக்சன் தொழில் செய்வதாகவும், தனக்கு தெரிந்த பூரணிமா என்பவருக்கு உதவி செய்ய, அவரது தந்தையின் வீடு சம்மந்தமாக சொத்து பிரித்து கொள்ள முயற்சி செய்யும் போது டவுன் சர்வே லேண் ரிஜிஸ்டர் எக்ஸ்டா ஆன் லைன் மூலம் எடுத்ததாகவும், அதில் அடங்கள் என்ற இடத்தில் நிலுவை என இருப்பதால் அது சம்மந்தமாக திரு.C.ரஜினிகுமார் என்பவரை சந்திக்க வந்ததாகவும். இது சம்மந்தமாக ஏற்கனவே ஒரு முறை தான் தனியாக திரு.C.ரஜினிகுமார் என்பவரை சந்தித்து அவர் கூறியபடி சேப்பாக்கத்தில் உள்ள சர்வேயர் செட்டில்மென் ஆபிஸ்கு போய் திருமதி ஆனந்தி என்பவரை சந்தித்ததாகவும், அவரது அறிவுறுத்தலின் பேரில் மீண்டும் திரு.C.ரஜினிகுமாரை செல்வி பூர்ணிமாவுடன் இன்று சந்தித்ததாகவும் கூறினார். அவரது இடது பாக்கெட்டில் வைத்திருந்த ரூபாய் நோட்டுகளை எடுத்து ஆஜர் செய்தார். அதை எண்ணிப்பார்க்க ரூ.36,000/- இருந்தது. அதைப்பற்றி விசாரிக்க தான் தனது தூப்புரவைசர் திரு.சீனிவாசன் என்பவருக்கு சம்பளம் மற்றும் போனஸ் கொடுக்க வைத்திருப்பதாக கூறினார். அவர் கூறிய காரணம் ஏற்கத்தக்கதாக இல்லாததால் ரூ.36,000/-யிரத்தை வழக்கின் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது பர்ஸிலிருந்து எடுக்கப்பட்ட பணத்தை எண்ணிப்பார்க்க அதில் ரூ.3,100/- இருந்தது. இதை பற்றி விசாரிக்க வழி செலவு மற்றும் பெட்ரோல் செலவுக்காக வைத்திருந்ததாக கூறியதால், அந்த பணத்தை திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரோடு வந்த ஓட்டுநர் திரு.நெடுஞ்செழியன் என்பவரை சோதனை செய்ய அவரது பேண்ட் பாக்கெட்டிலிருந்து எடுக்கப்பட்ட பணத்தை எண்ணிப்பார்க்க ரூ.21,000/- இருந்தது. இதை பற்றி விசாரிக்க தனக்கு சம்பளம் மற்றும் போனஸ் கொடுத்ததாக கூறினார். இவரது ஓனர் திரு.K.வெங்ட்ராமனை விசாரிக்க அவரும் அவ்வாறே கூறியதால் ரூ.21,000/- த்தை திரு.நெடுஞ்செழியன் என்பவரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது.இச்சோதனையின் போது முதல் மாடியில் நகர நிலவரி திட்ட அலுவலகத்தில் பணியிலிருந்த திரு.பொ.மனோகரன் என்பவரை சோதனை செய்ய அவர் வைத்திருந்த ரூ.500/- பற்றி அவரிடம் விசாரிக்க, பெட்ரோல் போட வைத்திருந்ததாக கூறினார். இவர் கூறிய காரணம் ஏற்கத்தக்கதாக இல்லாததால் ரூ.500/-ஐ வழக்கின் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.இச்சோதனையின் போது முதல் மாடியிலுள்ள நிலஅளவை பிரிவில் பணியாற்றிய திரு.முகமதுகசில் என்பவரை சோதனை செய்யப்பட்டது. அவர் வைத்திருந்த பர்ஸிலிருந்து பணத்தை எண்ணிப்பார்க்க ரூ.1040/- இருந்தது. இதைப்பற்றி விசாரிக்க பெட்ரோல் போடவும், மோட்டார் சைக்கிள் பழுது

பார்க்கவும் வைத்திருந்ததாக கூறினார். இவர் கூறிய காரணம் ஏற்கத்தக்தாக இல்லாததால் ரூ.1040/-த்தை வழக்கின் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.இச்சோதனையின் போது தரைதளத்திலிருந்த திருமதி.V.லலிதா வட்டாட்சியர் மற்றும் எல்லா அலுவலர்களும் சோதனை செய்யப்பட்டார்கள். அவர்கள் வைத்திருந்த தொகை குறித்து விசாரணை செய்யப்பட்டது. அவர்கள் சொன்ன காரணம் ஏற்க்க தக்கதாக இருந்ததால் அவர்கள் வைத்திருந்த தொகையை அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. இவ்வலுவகத்திலிருந்து சோதனை செய்யப்பட்ட அனைனத்து பணியாளருக்கும் வாக்குமூலம் தனி தனியாக பதிவு செய்யப்பட்டது. இச்சோதனையின் போது திரு.R.சிவகுமார், த/பெ.ராமசாமி என்பவரை விசாரணை செய்ய தற்காலிமாக ஓட்டுநராக முதல் மாடியிலுள்ள சிறப்பு மாவட்ட ஆய்வாளர் நில எடுப்பு அவர்களிடம் பணியாற்றுவதாகவும், வட்டாச்சியர் திருமதி.V.லலிதா என்பவர் கொடுக்கும் வேலைகளை செய்து கொடுப்பதாகவும், வருகிற விண்ணப்பதாரர்கள் கொடுக்கும் பணத்தை பெற்று வட்டாச்சியர் திருமதி.V.லலிதா அவரிடம் கொடுத்துவிடுவதாகவும் கூறினார். மேலும் அவர் வைத்திருந்த Nativity Certificate எண்.TN 3202011057817 நாள் 05.11.2020 என்ற ஆவணத்தை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதேப்போல் திருமதி.R.ஜெயந்தி என்பவர் தின கூலியாக சர்வே மற்றும் Settlement சார் ஆய்வாளர் திருமதி.J.ஜெயலட்சுமி என்பவரிடம் ரூ.8,000/யிரத்திற்கு வேலை செய்வதாகவும் கூறி ஆஜர்படுத்திய மாத சம்பள விவர பட்டியல் நகல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த இருதுறை கூட்டுத்தணிக்கை இன்று (06.11.2020) இரவு சுமார் 10.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த கூட்டுத்தணிக்கையின்போது அலுவலக பணிகளுக்கோ, பொது மக்களுக்கோ, உடமைகளுக்கோ எவ்வித பாதிப்புமின்றி உரிய முறையில் முடிக்கப்பட்டது. இந்த சோதனையின்போது வந்திருந்த பொது மக்களிடம் வாக்குமூலமாக பதிவு செய்யப்பட்டது. அதேப்போல் இவ்வலுவகத்தில் பணியாற்றிய அலுவலர்களிடம் தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இச்சோதனையின் போது வட்டாட்சியர் அலுவலகம் ஆலந்தூர், சென்னை-16, நகர நிலவரி திட்ட அலுவலகம், ஆலந்தூர், சென்னை-16 மற்றும் தேர்தல் பிரிவு ஆகியவற்றின் நவம்பர் மாத 2020 ஆம் ஆண்டிற்கான வருகை பதிவேட்டின் நகல் மாவட்ட ஆய்வு குழும அலுவலர் அவர்களின் சான்றொப்பம் செய்து விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

(ஒப்பம்./- xxxx )
1). திரு.A.அந்தோணி,
வட்ட கலால் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மாம்பலம் வட்டம்,
சென்னை-78.

(ஒப்பம்./- xxxx )
2). திரு.ம.வெற்றி செழியன்,
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
சென்னை நகரப் பிரிவு-IV, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16.

(ஒப்பம்./- xxxx )
3). திருமதி.T. ஜான்சிராணி,
காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-IV,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

(ஒப்பம்./- xxxx )
4). திருமதி. V. லலிதா,
வட்டாச்சியர், ஆலந்தூர்,
சென்னை.

(ஒப்பம்./- xxxx )
5). திரு.C.ரஜினிகுமார்,
சிறப்பு தனி வட்டாச்சியர்,
நகர நில வரி திட்டம்,
ஆலந்தூர், சென்னை.16.

(ஒப்பம்./- xxxx )
6). திரு.K. வெங்கடராமன்
த.பெ. K.V. கிருஷ்ணமூர்த்தி,
எண்.2, மேற்கு தெரு, ராகவன் காலனி,
அசோக் நகர், சென்னை.83.

(ஒப்பம்./- xxxx )
7).குமாரி.பூர்ணிமா குமாரசாமி,
த/பெ.ஊ.குமாரசாமி,
T/13A, நாகப்பன் தெரு,
B/1, குமரன் கன்ஸ்ட்ரக்சன்,
ஜாபர்கான்பேட்டை,
சென்னை.

(ஒப்பம்./- xxxx )
8). திரு.முத்தரசன் VAO,
நந்தபாக்கம்,
சென்னை.

(ஒப்பம்./- xxxx )
9). திரு.பொ.மனோகரன்
த/பெ.பொன்னுசாமி,
எண்.68, டாக்டர் அம்பேத்கர் நகர்,
சென்னை 55.

(ஒப்பம்./- xxxx )
10). திரு.முகமது சுகையல்,
த/பெ.சையது நசீருதீன்

(ஒப்பம்./- xxxx )
11). திரு.நெடுஞ்செழியன்,
த.பெ.முனுசாமி

(ஒப்பம்./- xxxx )
12). திரு.கே.நடராஜன், EPIC Operator.
Election Cell, Tahsildhar Office, Alandur
Chennai-16.

(ஒப்பம்./- xxxx )
13). திரு.R. சிவகுமார்,
த/பெ. ராமசாமி

(ஒப்பம்./- xxxx )
14) திரு.குரளரசன்